**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 01.07.2024 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் மக்களவையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாநிலங்களவையிலும், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்கள், தொடர்ந்து நடைபெற்றன.

நாடு முழுவதும் இன்று முதல் அமலுக்கு வந்துள்ள 3 புதிய குற்றவியல் சட்டங்களால், அதிநவீன குற்றவியல் நீதிக் கட்டமைப்பு உருவாகும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, இந்த சட்டங்கள் பற்றிய, கையேட்டை வெளியிட்டார்.

---

*தீர்மானம் 1 (19)*

நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவீக்கும் தீர்மானம் மீதான விவாதம் மக்களவையில் இன்று எடுத்துக்

கொள்ளப்பட்டது. பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அனுராக் தாக்கூர் விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில், கடந்த 10 ஆண்டுகளில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ், 80 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியம் வழங்கப் பட்டுள்ளதாக கூறினார். ஏழை மக்களுக்கு 4 கோடி வீடுகளும், 12 கோடி கழிவறைகளும் கட்டித்தரப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், உலகின் பலவீனப் பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்து இந்தியா, தற்போது உலகின் 5ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்பட்டு உள்ளதாகவும், விரைவிலேயே உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் என்றும் கூறினார். எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், நீட் முறைகேடு, அக்னி வீர் திட்டம், பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எழுப்பினார். நீட் பிரச்சனை குறித்து ஒருநாள் முழுவதும் விவாதிக்க வேண்டும் என அவர் கோரினார். தொடர்ந்துபேசிய போது, இந்து சமூகத்தினர் குறித்து அவர் வெளியிட்ட

*தீர்மானம் 2 (18)*

சில கருத்துகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆகியோர் ஆட்சேபித்தனர். இந்துக்களை ஒட்டுமொத்தமாக வன்முறை சமூகம் என பழிப்பது மிகவும் தீவிரமானது என்று பிரதமர் கூறினார். இதுகுறித்து திரு. ராகுல்காந்தி மன்னிப்பு கோர

வேண்டும் என திரு. அமித் ஷா வலியுறுத்தினார். உறுப்பினர்கள் அவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் பேச வேண்டும் என சபாநாயகர் திரு. ஓம் பிர்லா கூறினார். அக்னி வீர் திட்டத்தின் கீழ் ராணுவத்தில் சேரும் ஒருவர், பணியின் போது உயிரிழந்தால், தியாகி அந்தஸ்து பெறுவதில்லை என்று திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். இது தவறானது என்றும், இத்தகைய வீரர்களின் குடும்பத்தினருக்கு அரசு 1 கோடி ரூபாய் நிதி உதவி வழங்குவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பதில் அளித்தார். குறைந்தபட்ட ஆதரவு விலையினால், விவசாயிகளுக்கு சரியான விலை கிடைப்பதில்லை என்று திரு. ராகுல்காந்தி வெளியிட்ட குற்றச்சாட்டை வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் மறுத்தார். தொடர்ந்து பிஜேபி உறுப்பினர் திருமதி. பான்சுரி ஸ்வராஜ் உள்ளிட்ட உறுப்பினர்களும் விவாதங்களில் பங்கேற்று பேசினர். முன்னதாக, நீட் பிரச்சனை காரணமாக, எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

*தீர்மானம் 3 (19)*

மாநிலங்களவையில், நீட் பிரச்சனை தொடர்பான எதிர்கட்சிகளின் ஒத்தி வைப்பு தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க, அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் மறுத்து விட்டார். பின்னர் அவையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றன. குடியரசுத் தலைவரின் உரையில் தொலை நோக்கு இல்லை என்று எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே

கூறினார். நீட் கேள்வித்தாள் கசிவு, ரயில் விபத்துகள், ஜம்மு-காஷ்மீர் தீவிரவாத தாக்குதல் உள்ளிட்ட பிரச்சனைகளையும் அவர் எழுப்பினார். நாடாளுமன்ற வளாகத்தில் முக்கிய தலைவர்களின் சிலைகளை இடம்மாற்றும் முடிவையும் அவர் ஆட்சேபித்தார். பொது மக்கள் எளிதில் மரியாதை செலுத்த ஏதுவாக, சரியான இடத்தில்தான் சிலைகள் வைக்கப் பட்டுள்ளதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ பதில் அளித்தார். மக்களவைத் தேர்தலில், 17 அமைச்சர்கள் தோல்விஅடைந்து இருப்பதாகவும், இதுவே ஆளும் கட்சிக்கு மக்கள் கொடுத்த பாடம் என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறினார். நாட்டு மக்களுக்காக ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையம் பாதுகாக்க, எதிர்கட்சிகள் தொடர்ந்து பாடுபடும் என்று அவர் தெரிவித்தார். ரயில்வே துறையில் காலியாக உள்ள 3 லட்சம் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என அவர் வலியுறுத்தினார். கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 5 லட்சம் பேர்

*தீர்மானம்* 4 (5)

ரயில்வே துறையில் வேலை பெற்றுள்ளதாகவும், முந்தைய ஆட்சி காலத்தை விட இது அதிகம் என்றும் ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் பதில் அளித்தார். முன்னதாக, இரு அவைகளிலும், ஆடவர் 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு வாழ்த்து தெரிவிக்கப் பட்டது.

---------------------------

*அமித் ஷா 1 (19)*

நாடு முழுவதும் இன்று முதல் அமலுக்கு வந்துள்ள, பாரதீய Nyay சம்ஹிதா, பாரதீய நாகரிக Suraksha சம்ஹிதா, பாரதீய Sakshya அதிநியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள், நாட்டில் அதிநவீன குற்றவியல் நீதிக் கட்டமைப்பு உருவாக, வழிகோலும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் கிரிமினல் நீதிக் கட்டமைப்பு தற்போது முற்றிலும் இந்திய மரபுகள் பொதிந்த சுதேசி கட்டமைப்பாக மாறி இருப்பதாக தெரிவித்தார். 3 புதிய குற்றவியல் சட்டங்களால் நீதி வழங்கும் நடைமுறைகள் துரிதமாகும் என்றும், பாதிக்கப்பட்டோர் உரிமைகள் உறுதியாகும் என்றும் அவர் தெரிவித்தார். முன்பு இருந்த சட்டங்களில் போலீசாரின் உரிமைகளுக்கு மட்டுமே பாதுகாப்பு இருந்த நிலையில், தற்போது, பாதிக்கப்பட்டோர் மற்றும் புகார் மனுதாரர்களின் உரிமைகளும் பாதுகாக்கப் படுவதாக அவர் கூறினார்.

தேச துரோக சட்டத்தை அரசு ரத்து செய்து, தேச விரோத சக்திகளுக்கு எதிராக புதிய ஷரத்துகளை கொண்டு வந்திருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்தார். புதிய குற்றவியல் சட்டங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளதாகவும், இதற்கென 35 பிரிவுகள் கொண்ட தனி அத்தியாயம் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கூட்டு பாலியல்

*அமித் ஷா 2 (14)*

பலாத்காரம் என்னும் கொடுங் குற்றத்திற்கு இனி, 20 ஆண்டு சிறை தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்க முடியும் என்றும், சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இத்தகைய குற்றங்களால் பாதிக்கப்படும் பெண்கள், தங்களின் வீட்டில், சொந்த குடும்பத்தினர் முன்னிலையில், பெண் அதிகாரிகளிடம் வாக்குமூலம் அளிக்க, புதிய சட்டத்தில் இடம் இருப்பதாக, அமைச்சர் கூறினார். ஆன்-லைன் எஃப்ஐஆர் வசதிகளுக்கும் வகை செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து எதிர்கட்சிகள் பொய்களை பரப்பி வருவதாக திரு. அமித் ஷா குற்றம்சாட்டினார். இந்த சட்டங்கள் குறித்து மக்களவையில் 9 மணி நேரத்திற்கும், மாநிலங்களவையில் 6 நேரத்திற்கும் இடம்பெற்ற நீண்ட விவாதங்களில், கணிசமான எண்ணிக்கையில் எதிர்கட்சித் தலைவர்களும் பங்கேற்றதாக அவர் கூறினார்.

---------------------------

*குற்றவியல் சட்டம் 1 (15)*

புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் தொடர்பான அறிமுக நிகழ்ச்சி, கதிர்காமம் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கலையரங்கக் கூடத்தில் இன்று

நடைபெற்றது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து, மாநில அரசின் சட்டத் துறையால் தயாரிக்கப்பட்ட கையேட்டை வெளியிட்டார். அப்போது அவர் பேசுகையில், கடுமையான குற்றங்களில் விரைந்து நீதி கிடைக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம் என்றும், புதிய சட்டங்களில் இதற்கான காலக்கெடு விதிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். பல்வேறு குற்றங்களுக்கான தண்டனைகள் மற்றும் புதிய குற்றவியல் சட்டங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, காவல் துறையும், சட்டத் துறையும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்துவதும், சுற்றுலா பயணிகள் அச்சமின்றி வந்து செல்வதற்கான இடமாக மாற்றுவமே அரசின் எண்ணம் என்று, முதலமைச்சர் தெரிவித்தார்….

(வாய்ஸ்)

*குற்றவியல் சட்டம்* 2 (6)

இந்நிகழ்ச்சியில், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. கேஎஸ்.பி ரமேஷ், தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான், காவல் துறை தலைமை இயக்குனர் டாக்டர் ஸ்ரீனிவாஸ், காவல் துறை ஐஜி டாக்டர் அஜித் குமார் சிங்லா, சட்டத் துறைச் செயலர் திரு. சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

வயிற்றுப் போக்கு (17)

குழந்தைகளிடையே வயிற்றுப் போக்கு நோயை தடுப்பதற்கான மத்திய அரசின் ஸ்டாப்-டயோரியா இயக்கத்தை புதுச்சேரியில் அமல்படுத்துவதற்கான தொடக்க விழா, கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இன்று நடைபெற்றது. சுகாதாரத் துறை சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு, நீர்ச்சத்து குறைப்பாட்டை போக்குவதற்கான ஓஆர்எஸ் கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகளை குழந்தைகளுக்கு வழங்கியும் விழிப்புணர்வு சுவரொட்டிகளை வழங்கியும் இயக்கத்தை தொடக்கி வைத்தார். கையெழுத்து இயக்கம் மற்றும் செல்ஃபி நிலையத்தையும் அவர் தொடக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு. கேஎஸ்பி ரமேஷ், சுகாதாரத் துறைச் செயலர் திரு. எம். ராஜு, சுகாதாரத் துறை இயக்குனர் டாக்டர் ஸ்ரீராமுலு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் இன்று முதல் அடுத்த மாதம் 31ஆம் தேதி வரை, 2 மாதங்களுக்கு அமலாக உள்ள ஸ்டாப்-டயோரியா இயக்கத்தின் கீழ், 5 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், தலா 2 ஓஆர்எஸ் பாக்கெட்டுகள், மற்றும் 14 துத்தநாக மாத்திரைகள், அவர்களின் வீடுகளுக்கே சென்று விநியோகம் செய்யப்பட உள்ளன.

-------------------------

*புதுச்சேரி மருத்துவமனை (9)*

புதுச்சேரி இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் 4ஆம் தளத்தில், நவீன வசதிகளுடன் கூடிய 11 அறுவை சிகிச்சை மையங்களை நிறுவ, தற்போது நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி ரமேஷ், சுகாதாரத் துறை இயக்குனர் டாக்டர் ஸ்ரீராமுலு, இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் உதய்சங்கர் மற்றும் இதர அதிகாரிகள் இந்த ஆய்வின் போது உடன் இருந்தனர்.

---------------------------

*டாக்டர்கள் தினம் (8)*

தேசிய மருத்துவர்கள் தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, டாக்டர்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். மிகவும் சிக்கலான நோய்களையும் திறம்பட்ட முறையில் கையாளும் திறன் படைத்தவர்கள் டாக்டர்கள் என்றும், மருத்துவர்களின் அபார அர்ப்பணிப்பு மற்றும் கருணை உணர்வை போற்றும் நாள் இது என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மருத்துவர்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதை

உறுதிப்படுத்தவும் அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

---------------------------

*பட்டயக் கணக்காயர்* (9)

பட்டயக் கணக்காயர் தினமான இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, பட்டயக் கணக்காயர்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார சூழலுக்கு வடிவம் கொடுப்பதில் பட்டயக் கணக்காயர்களின் பங்கு மிக முக்கியமானது என்றும், பட்டயக் கணக்காயர்களின் நிபுணத்துவத்தினால், வர்த்தக நிறுவனங்கள்-தனிநபர்கள் ஆகிய இருதரப்பினரும் பயன் பெறுவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத் தன்மையை மேம்படுத்துவதிலும் பட்டயக் கணக்காயர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் மீதான விவாதம் மக்களவையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாநிலங்களவையிலும், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்கள், தொடர்ந்து நடைபெற்றன.

நாடு முழுவதும் இன்று முதல் அமலுக்கு வந்துள்ள 3 புதிய குற்றவியல் சட்டங்களால், அதிநவீன குற்றவியல் நீதிக் கட்டமைப்பு உருவாகும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, இந்த சட்டங்கள் பற்றிய, கையேட்டை வெளியிட்டார்.

---------------------------